2012 மே 3]

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே வெடிகுண்டு வெடிக்கப்பட்டிருக்கிறது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆய்வில் இருக்கிறது; உட்காருங்கள். திரு. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் எனது ஆரணி தொகுதியிலே, ஆரணி நகராட்சியிலே தேர்த் திருவிழாவின்போது . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது சம்பந்தமாக* reply *வந்ததும் எடுக்கப்படும்.* Please sit down.

(இ) அரூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பெண்கள் இறந்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லிபாபு அவர்கள்.*

***திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24 ஆம் தேதி, அரூர் அரசு மருத்துவமனையில் கருத்தடை அறுவை சிகிச்சைப் பெற்ற ஷோபனா என்ற 32 வயதுப் பெண்மணி இறந்துவிட்டார். அதேபோல, மொரப்பூரிலே சிகிச்சை பெற்ற கனகவல்லி என்ற பெண் இறந்துவிட்டார். அவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சம்பந்தப்பட்ட மருத்துவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் உள்ளது.*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், குடியாத்தம் கர்ப்பபுள்ளீஸ்வரர் ஆலயத் தேர்த் திருவிழாவில் . . .*